மே 27, 2015

## ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது

ஓ என்னுடைய இனிமையான, பிரியமான, நீண்ட காலம் காணாமல் போய் தற்பொழுது கண்டுபிடிக்க பட்டிருக்கும் குழந்தைகளே என்கிறார் பாபா. நீங்கள் இப்போது தந்தையிடமிருந்து உயர்ந்த மகா வாக்கியங்களை கேட்டு அழகான மலர்களாகிக் கொண்டிருக்கின்றீர்கள். குழந்தைகளாகிய நீங்கள் தற்பொழுது உங்களிடம் பேசுவது ஓர் மனிதரல்ல என்பதை அறிவீர்கள். சிவ்பாபா இந்த ஒருவரில் தற்போது பிரசன்னமாகியிருக்கின்றார். அவர் கூட ஓர் ஆத்மா ஆவார், ஆனால் அவர் பரமாத்மா என்று அழைக்கப்படுகின்றார். நம்மை மேன்மை பொருந்தியவர்களாக ஆக்கும் அவர் பரம்பிதா ஆவார். "பரம்பிதா" என்னும் சொற்சொடர் மிகவும் இனிமையாக இருக்கின்றது.

இனிமையான பாபா, நாள்பொழுதில் நீங்கள் என்னுடைய பாபா என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்து கொள்வேன். கடவுள் என்னுடைய தந்தை, என்னுடைய பாபா என்ற அளவு கடந்த சந்தோஷத்தை நான் எனது விழிப்புணர்வில் பராமரிப்பேன். பரம்பிதாவாகிய உங்களை நான் அதிகமான அன்புடன் நினைவு செய்வேன். நீங்கள் மிகவும் இனிமையானவராக இருக்கின்றீர்கள். பிரியமான பாபா, நீங்கள் எனக்கு கற்பித்து என்னை அழகான மலராக மாற்றுகின்றீர்கள். மேலும் உலக இராஜாங்கத்திற்கு தகுதி வாய்ந்த மேன்மை பொருந்தியவராக ஆக்குகின்றீர்கள்.

## சமார்த்தி அல்லது சக்தி

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

## மனோ-விருத்தி அல்லது மனோபாவம்

பாபா ஆத்மாவிற்கு: துல்லியமான விருப்பமின்மையின் மனோபாவம் என்பதன் சுலபமான அர்த்தம், நீங்கள் பற்றற்று விலகயிருக்கும் அதே அளவிற்கு அன்பாக இருக்க வேண்டும் என்பதாகும்.

நான் விருப்பமின்மையின் மனோபாவத்தை அரவணைப்பதில் உறுதியாக இருக்கிறேன். நான் மிகவும் அன்பாகவும் மிகவும் பற்றற்று விலகியும் இருப்பேன். நான் மக்களை அவர்கள் யாராக இருக்கின்றார்களோ அவர்களை அவ்வாறே நேசிக்கிறேன் ஆனால் எனக்கு பிடித்தவை என்று எதுவும் இல்லை. நான் மற்றவர்கள் என் வாழ்கையில் அவர்கள் இருப்பதை பாராட்டுகிறேன் ஆனால் யாரிடமும் சிக்கிக் கொள்வதில்லை என்பதால் பற்றற்று விலகியிருக்கின்றேன். நான் உடனடியாக முடிவுகளை பார்க்க முடியாமல் இருக்கலாம், இருந்தபோதிலும் இவ்வாறான அன்பு மற்றும் பற்றற்று விலகியிருப்பது விருப்பமின்மையின் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கின்றது.

## திருஷ்டி அல்லது தூய பார்வை

பாபா ஆத்மாவிற்கு: நீ சிவ்பாபாவிடமும் பிரம்மா தாதாவிடமும் செல்கின்றாய் அவர்கள் இணைந்திருக்கின்றார்கள் என்று புரிந்துகொண்டிருக்கின்றாய். நாம் நம்மை உலகின் அதிபதி ஆக்குகின்ற ஒருவரை சந்திக்க போகின்றோம். எல்லையற்ற உள்ளார்ந்த சந்தோஷம் இருக்க வேண்டும். ஒரு பெண் தனது எதிர்கால கணவரை சந்திக்கயிருக்கும்போது, அவள் நகை முதலியவற்றை அணிகின்றாள். மேலும் அவளது முகம் மலர்கின்றது; அவள் முகம் துக்கத்தை பெறுவதற்கு மலர்கின்றது! உங்கள் முகங்கள் நிலையான மகிழ்ச்சியை பெறுவதற்கு பூத்து குலுங்குகின்றது.

நான் என்னுடைய கண்களில் பாப்தாதாவை வைத்திருப்பேன். பாபா என்னை உலகின் மாஸ்டராக்குகின்றார். பாபாவை நினைவு செய்வதும் என்னுடைய ஆஸ்தியை பெற்றுக்கொண்டிருப்பதன் விளைவு என்னுடைய முகத்தை மலரச் செய்கின்றது. இந்த மலரும் முகமும் பாப்தாதாவும் இன்று என்னுடைய திருஷ்டியில் இருக்கின்றனர்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*